**பஸ்கொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பஸ்கொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 572,195 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 326,108 ஆன கடன் தவனைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,625,551 ஆன 08 நிலுவையான ஏனைய வருமான மீதிகளும், ரூபா 1,531,450 ஆன கடன்கொடுனர் மீதியொன்றும் மற்றும் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 684,282 ஆன 04 செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் இருந்த போதிலும், அவை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்தம் ரூபா 16,997,710 ஆன காணியும் கட்டிடங்களுக்கான வருடாந்த பண்டகக் கணிப்பீடு அறிக்கையும், ரூபா 12,513,907 ஆன இயந்திரஉபகரணங்கள், மோட்டார் வண்டியும் மாட்டு வண்டியும், மற்றும் தளபாடம் தொடர்பாக நாளாதுவரையாக மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும் பட்டோலையும், சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 பிரகாரம் பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,268,648 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,337,604 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,931,044 ஆன வளர்ச்சி காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் மீண்டுவரும் செலவினம் 76 சதவீதத்தை விஞ்சிய பெறுமானத்தை எடுத்திருந்த போதிலும், வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிக உயர்ந்த நிலைமையில் நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், வருமான உதவி மற்றும் சுய சம்பாதிப்பு வருமானம் போன்ற மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 39,177,941 | 20,436,757 | 18,741,184 | 29,909,293 | (11,168,109) |
| 2014 | 31,284,518 | 12,476,128 | 18,808,390 | 24,946,914 | (6,138,524) |
| 2013 | 26,182,098 | 10,961,872 | 15,220,226 | 21,789,672 | (6,569,446) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டினுள் சபையின் வருமான உதவியின் அதிகரிப்பு காட்டப்பட்ட போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானத்தில் குறைவாக காட்டப்பட்டது.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சி மூன்று வருடங்களிலும் கனிசமான பெறுமானத்தால் மீண்டுவரும் செலவு அதிகரித்து இருந்தது.

(iv) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள்நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(v) மேல் இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்த்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி நிலைமை தொடர்பில் சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 வருமானம் நிருவாகம்

### 2.3.1 வீத வரி

ஊருபொக்க நகரம் வீத வரி வலயமாக பெயரிடுவதற்கு 2014 ஆண்டின் சபை அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையும் அத் தீர்மானம் அமுழ்படுத்தாதனால் சபை நிதியத்திற்கு பெற வேண்டிய வருமானம் கிடைக்காமல் இருந்தது.

### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி மற்றும் பற்றுச்சீட்டிடலோடு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 209, 893 ஆனது. ஆரம்ப நிலுவையின் 49 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 51 சதவீதம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்துடன், நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடைஅறை வாடகை

(அ) ஆரம்ப நிலுவை மீதியில் பற்றுச்சீட்டிடல் உள்ளடங்கும் போது அறவிடவேண்டிய மொத்தப் பணம் ரூபா 2,878,978 ஆனது. ஆரம்ப நிலுவையில் 20 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 15 சதவீதம் மாத்திரம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. கடைஅறை வாடகை அறவிடலின் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் நிலவியதால் ஆண்டு இறுதியில் நிலுவை மீதி ரூபா 2,407,315 அளவான உயர் பெறுமானத்தை கொண்டிருந்தது.

(ஆ) ஊருபொக்க புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் மற்றும் வீனஸ் விளையாட்டரங்கின் முன்புறமாகவுள்ள 26 கடை அறைகளின் ஒப்பந்தம் நாளாவதுவரையாக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 2,210,515 ஆனது. 2014 செப்தம்பர் முதல் கடைஅறை வாடகை மதிப்பிடப்பட்டிருந்த போதும் அம்மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகை ஒப்பந்தத்தின் 6 வது நிபந்தனை மற்றும் தென்மாகான, உள்ளூராட்சி அணையாளரின் 2010 திசெம்பர் 27திகதிய இலக்கம் தபபா/பாபாகொ/2010/01 கொண்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காது ஊருபொக்க புதிய வியாபாரக் கட்டிடத்தொகுதியில் 09 கடை அறைகள் மூல வாடகைக்காரரினால் உப வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

### 2.3.4 வீதி விலக்கு உதவி

ஆரம்ப நிலுவை மீதிக்கு ஆண்டிற்கான பற்றுச்சீட்டிடல் உள்ளடங்கப்பட்ட போது ரூபா 259,740 அறவிடப்படவேண்டிருந்தது. ஆரம்ப நிலுவையின் 17 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 51 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததனால் நிலுவை அறவிடல் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 836,937 மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 5,970,895 பெற வேண்டியதாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

பிரதேச சபையை எழுச்சியூட்டும் தேசீய நிகழ்ச்சித் திட்டம்

2015 ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 06 மில்லியன் பணத்தில் மீளாய்வாண்டின் ஜுலை மாதத்தில் செலவு செய்த ரூபா 1,000,000 பணத்தை தொடர்பாக செலவின அறிக்கை தாமதித்து சமர்ப்பித்ததன் காரணமாக மீதி ரூபா 5,000,000 பணத்தை விடுவிக்கப்படாததனால் ஆண்டினுள் 10 கருத்திட்டங்களை செயற்படுத்த முடியாதிருந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

**மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளனித்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 04 வெற்றிடமும், 04 ஊழியர்களின் மிகையும் நிலவியதுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மிகையை முறையாக்கிகொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கி கணக்குக் கூற்று

சபையின் பொது நிதியத்திற்கு தொடர்பான வங்கி கணக்குக் கூற்றின் பிரகாரம் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்படும் ரூபா 241,927 ஆன இனங்காணப்படாத நேரடி செலவு வைப்பை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

**ஊழியர் கடன்**

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,313,868 ஆன ஊழியர் கடன் நிலுவையில் பல ஆண்டுகளாக நிலுவையாகவுள்ள ரூபா 29,603 ஆன 09 மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டில் வீத எழுச்சி கிராம அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் சபை அதிகார எல்லைக்குள் 02 பாதைகளை அபிவிருத்தி செய்ய ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட ரூபா 1,000,000 ஆன ஒதுக்கத்தின் மீது செய்யப்பட்ட வேலைக்காக பயன்படுத்தப்பட்ட கொன்கிரீட் துண்டுக் கற்களின் நியமம் (25N/nm) இல்லாததனால் இவ் வேலைகளுக்கான கொடுப்பனவு நெடுஞ்சாலை அமைச்சினால் மறுக்கப்பட்டிருந்தது. இவ் வேலை முழுமையாக தோல்வி அடைந்திருந்ததுடன், வேலை ஒப்பந்தத்தின் 13 வது நிபந்தனைப் பிரகாரம் மீண்டும் பாதையை செய்து கொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டு கிராமத்தின் கிராமத்திற்கு வாயிலின் வாயிலுக்கு வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 செலவில் நிர்மானிக்கவிருந்த எஹலகந்த அபேகோன் யாய பாதையை அபிவிருத்தி செய்வதற்கான வேலைகள் ஆண்டு இறுதிவறையிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) சபையின் நிர்மானப்பணி

பிரதான அலுவலகத்தின் முன்னால் புண்ணிய ஸ்தலமொன்று நிர்மானிப்பதற்காக ரூபா 200,000 கடன்கொடுனர் ஒதுக்கம் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் ஆண்டினுள் அவ் வேலையை செய்திருக்கவில்லை.

### 3.5 கழிவு பொருள் முகாமை

சபை அதிகாரி எல்லைக்குள் கழிவுப் பொருட்கள் முகாமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலினையின் போது கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணியில் குப்பைகள் இடப்பட்டிருந்தன.

(ஆ) அதிகார எல்லைக்குள் குப்பை இடுதலுக்காக வாடகை அறவிடப்படாவிடினும் கழிவுப் பொருட்கள் முகாமையிற்காக மீளாய்வாண்டில் சபை மூலம் ரூபா 2,872,805 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒர் செலவின விடயத்தின் மதிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சிய ரூபா 3,623,771 ஆன செலவும், 06 செலவின விடயங்களின் கூட்டுமொத்த ரூபா 5,545,638 ஆன சேமிப்பும், 05 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்ப்பார்கப்பட்ட வருமானம் ரூபா 2,478,060 வும், 02 வருமான விடயங்களின் ரூபா 4,500,056 ஆன அனுகூலமான விலகலும் இருப்பதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்ட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 426,064 செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை**

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் கலி பவுசர் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதி 06 வாகனங்களும் குறைய்வாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) நிதி கட்டுப்பாடு.

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்.

(உ) மனித வள முகாமைத்துவம்.